உ
சிவமயம்

Registered as a News-
paper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ௫௬] யாழ்ப்பாணம்:—தாரண௵ ஆனி மீ ௫உ (1944 ஜூன்மீ 19 திங்கட்கிழமை) [இல. ௨௧


## பிரிட்டன் மீது விமானியில்லாத நாஜி விமானங்கள்

லண்டன் யூன் 16—

பிரிட்டன்மீது ஜெர்மானிய விமானிகள் இல்லாத விமானங்களை உபயோகிக்க ஆரம்பித்திருக்கிறார்களென்று மிஸ்டர். மாரிசன் இன்று பொதுஜன சபையில் அறிவித்தார். செவ்வாய்க்கிழமையன்று காலையில் இம்மாதிரியான விமானங்கள் கொஞ்சமாக உபயோகிக்கப்பட்டன. நேற்றிரவிலும் இன்று காலையிலும் இவ் விமானங்கள் ஏராளமாக வந்தன. முதற்தடவையில் சொற்ப சேதமே ஏற்பட்டது. நேற்றிரவு நடைபெற்ற தாக்குதல் அதைவிடப்பெரிதாகும். அதனால் ஏற்பட்ட சேதம் விவரம் இன்னும் கிடைக்கவில்லை. நிலைமையைச் சமாளிக்கநடவடிக்கைகள் தீவிரமாக எடுக்கப்பட்டன.

மிஸ்டர். ஹெர்பர்ட் மாரிசன் அறிக்கை கூறுவதாவது:-பிரிட்டன் மீது விமானிகள் இல்லாத விமானங்களை உபயோகிக்க ஜெர்மானியர் ஏற்பாடுகள்செய்துவருவது கொஞ்சகாலமாகத் தெரியும். இப்புதிய ஆயுதத்தை ஜெர்மானியர் உபயோகிக்க ஆரம்பித்துவிட்டனர். செவ்வாய்க்கிழமையன்று காலை இவ்விமானங்கள் கொஞ்சமாகவே உபயோகிக்கப்பட்டன. அதனால் ஏற்பட்ட சேதமும் மிகவும் சொற்பமாகும்.

நேற்றிரவிலும் இன்று காலையிலும் ஏராளமாக இவ்விமானங்கள் உபயோகிக்கப்பட்டன. இத்தாக்குதல்களில் ஏற்பட்ட சேதவிபரம் இன்னும் கிடைக்கவில்லை. அழிக்கப்பட்ட சத்துரு விமானங்களின் எண்ணிக்கையும் தெரியவில்லை. இந்நிலைமை சமாளிக்க எதிர் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தாக்குதல்கள் இன்னும் நடைபெறலாம். போதிய அனுபவம் ஏற்படும்வரை வழக்கம்போல அபாயச்சங்கு ஊதப்படும். இவ்விமானங்கள் எங்கு சுட்டு வீழ்த்தப்பட்டனவென்பதை வெளியிடாமல் இருப்பது நல்லது. ஏனெனில் அவைகள் இவ்விமானங்களை அனுப்புவதற்கு சத்துருவிற்கு மிகவுஞ் சௌகரியமாயிருக்கும். சாதாரண விமானத் தாக்குதல்களும் இவ்விமானத் தாக்குதல்களுக்கும் வித்தியாசங் கண்டுபிடிப்பது கஷ்டமாயிருக்கலாம். தென் இங்கிலாந்தில் நடைபெறும் விமானத் தாக்குதல்களைப் பற்றிமுழுத்தகவல்களும் வெளியிடப்படல்லையென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. தென் இங்கிலாந்தில் விமானத்தாக்குதல் நடைபெற்றது.

இப்புதிய ஆயுதத்தைப்பற்றி அளவுக்கு மிஞ்சி கவலைப்படவேண்டியதில்லை. இவ்விமானத்தாக்குதல் பகல் நேரத்தில் தெருக்களில் மக்கள் ஏராளமாக கூடியிருக்கும் சமயத்தில் நடைபெறலாம். விமானிகள் அல்லாத விமானங்கள் சுட்டு வீழ்த்த விமானவிழ்த்திப் பீரங்கிகள் உபயோகிக்கப்படும். பீரங்கிகள் சுடும்பொழுது ஜனங்கள் தெருக்களில் நின்று வேடிக்கை பார்க்கக் கூடாதென்று எச்சரிக்கை செய்ய

ற்றன. அனுபவம் ஏற்பட ஏற்பட மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இவ் விமானங்கள் எங்கெங்கு விழுந்தன வென்பது வெளியாகாமல் இருக்க பத்திரிகைகளுக்கு [illegible] செய்யப் பட்டிருக்கிறது.

## டோக்கியோவைப் புதுரக அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் தாக்கின

வாஷிங்டன் யூன் 15

அமெரிக்க பெரிய கோட்டை விமானங்கள் டோக்கியோவை இன்று தாக்கினவென்று அமெரிக்க பிரதிநிதிகள் சபையிற் சொல்லப்பட்டது.

20வது அமெரிக்க வெடிகுண்டு விமானப் படையைச் சேர்ந்த பெரிய பறக்கும் கோட்டைகள் இன்று ஜப்பானைத் தாக்கின என்று அமெரிக்க யுத்த இலாகா அறிவித்தது.

இந்தச் செய்தி அமெரிக்கா முழுவதிலும் ஒருவித பரபரப்பான உணர்ச்சியை ஏற்படுத்திவிட்டது. ஐரோப்பாவில் நடைபெறும் படையெடுப்பு நடவடிக்கைகளைக்கூட இந்தச் செய்தி மழுங்கடித்துவிட்டது.

'பேர்ள் ஹார்பர்' தாக்கப்பட்டபோது அமெரிக்கர்களிடம் தோன்றிய மனப்பான்மையை அறிந்திருப்பவர்கள்மாத்திரந்தான ஐரோப்பாவின் சொந்த வீட்டில் நடைபெற்ற இந்த இரண்டாவது அமெரிக்கத் தாக்குதலைப்பற்றிய செய்தி அமெரிக்க மக்களுக்கு எவ்வளவு குதூகலத்தை ஏற்படுத்தியிருக்குமென்பதை அறிந்துகொள்ள முடியும்.

பெரிய பறக்கும்கோட்டை விமானங்கள் டோக்கியோவைத் தாக்கினவென்ற செய்தியை பிரதிநிதிகள் சபையில் அலபாமா பிரதிநிதி திரு. ஸ்டார்னெஸ்தான் முதலில் அறிவித்தார். இந்தச் செய்தி உத்தியோக முறையில் ஊர்ஜிதம் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

## மற்றொரு தீவில் அமெரிக்கர் இறங்கினர்

வாஷிங்டன் யூன் 15—

ஸைப்பான் தீவில் அமெரிக்க தாக்கும் படைகள் இறங்கின வென்று இன்றிரவு பஸிபிக் பிராந்தியத்தின் பிரதம சேனாதிபதி அறிவித்தார்.

இந்தத் தீவு மரியானா தீவுக்கூட்டங்களில இருக்கிறது. ஜப்பானியர் மூர்க்கமாக எதிர்த்தும் அமெரிக்கப் படைகளுக்குச் சொற்ப சேதமே ஏற்பட்டதென்று முதலாவது செய்திகள் கூறுகின்றன.

## இலங்கை 'டிப்ளோமா'

மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியரான திரு. எஸ். சுப்பிரமணியம் என்பவர் 1943-ம் ஆண்டு யூலை மாதம் வைக்கப்பட்ட 'டிப்ளோமா' பரீட்சையில சித்தியடைந்திருக்கிறார். அதனோடு லண்டன் M. A. பரீட்சைக்கு ஒரு வெளி மாணவராகவும் அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றனர்.

## சிங்களத்தையும் தமிழையும் பழக்கத்திற் கொண்டு வருதல்

### அரசாங்க இலாகாத் தலைவர்களுக்கு வேண்டுகோள்

பொதுஜனங்கள் அரசாங்க இலாகாக்களுக்குச் சிங்களத்தில் அல்லது தமிழில் எழுதும் கடிதங்களுக்கு இனிமேற் கூடுதலான மதிப்புக் கொடுக்கப்பட விருக்கிறது. அத்தகைய கடிதங்களுக்கு அரசாங்க இலாகாக்கள் எழுதும்பதில்கள் கடிதங்கள் எழுதப்பட்ட அதே பாஷையில் எழுதப்படும். சிங்களத்தில் எழுதப்பட்ட கடிதங்களுக்குச் சிங்களத்திலும் தமிழில எழுதப்பட்ட கடிதங்களுக்குத் தமிழிலும் பதில் எழுதப்படும்.

பிரதம காரியதரிசி எல்லா அரசாங்க இலாகாக்களுக்கும் இந்த வேண்டுகோளை அறிவிக்கையிற் கூறுவதாவது:— இலாகாத் தலைவர்கள் தமது இலாகாக்களுக்குச் சிங்களத்தில் அல்லது தமிழில் வரும் கடிதங்களுக்கு அதே பாஷையில் பதிலளிக்க வேண்டுமென்று அரசாங்கத்தார் விரும்புகின்றனர்.

பெரும்பாலான அரசாங்க இலாகாக்கள் சிங்களத்தில் அல்லது தமிழில் ஒருகடிதம் கிடைத்தால் அதில் அடங்கியிருக்கும் விஷயம் கவனிக்கப்பட வேண்டியதா என்பதைத் தெரிந்து கொள்வதற்காக அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ஆங்கிலத்திலேயே பதிலளித்து விடுகின்றன.

சிங்களத்தில் அல்லது தமிழில் கடிதமெழுதியவர் அந்தப் பதிலை மொழிபெயர்க்கச் செய்து மீண்டும் எழுத வேண்டியதவசியமாயிருந்தால் முதலில் என்ன பாஷையில எழுதினாரோ அதே பாஷையிலெழுதுகிறார். புதிய ஏற்பாட்டினால் இக் கஷ்டம் தீர்ந்துவிடும்.

சில காரியங்களுக்குக் கிடைக்குங் கடிதங்களுக்கு அதே பாஷையிற் பதிலளிப்பதற்குப் போதிய அளவு சிங்களம் அல்லது தமிழ் தெரிந்த கிளார்க்குமார்கள் இல்லாமையால் தமிழிலும் சிங்களத்திலும் வரும் கடிதங்களுக்கு அதே பாஷையிற் பதிலளிக்கும் முறையை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவது சாத்தியமில்லையென்று கூறலாம்.

### 'பியன்'கள் மொழி பெயர்த்தல்

உதாரணமாகச் சில காரியங்களில் 'பியன' மட்டுமே சிங்களவராக இருக்கிறார். அக் காரியாலயத்துக்குச் சிங்களத்தில ஒரு கடிதம் வந்தால் அதை மொழிபெயர்ப்பதற்கு அந்த 'பியனை' அழைக்கப்படுகின்றனர். சிங்களத்திலும் தமிழிலும் வரும் கடிதங்களுக்கு அதே பாஷையிலேதான் அரசாங்கத்தார் பதிலளிக்க வேண்டுமென்று ஏற்பட்டால் கூடுதலான சிப்பந்திகளை வேண்டியிருப்பதோடு சிங்களத் தமிழ் 'டைப்' அடிக்கும் மெஷின்களும் மிகவும் அதிகமாக உபயோகிக்க வேண்டியிருக்குமென்று [illegible]படுகிறது.

## பொலீஸ்காரருக்கு உயர்ந்த சம்பளம்

### படையில்மேலும் ஆட்கள் வந்து சேரப் புதிய யோசனை

பொலிஸ் படைக்கு மேலும் புதிதாக ஆட்கள் வந்து சேருவதற்காகப் பொலிஸ் கொன்ஸ்டபிள்களின் சம்பளத்தை அதிகரிப்பது பற்றி உள்நாட்டு நிர்வாகசபை ஆலோசித்து வருகிறது.

ஒரு பொலீஸ் கொன்ஸ்டபிளுக்கு ஆரம்பத்தில் 50 ரூபாய் கொடுக்கப்படவேண்டுமென்று விலகிப்போன இன்ஸ்பெக்டர் ஜெனரல் கேணல் ஜி. எச். ஆர். ஹல்லண்ட் பொலீஸ்படையின் சீர்திருத்தத்துக்காகச் சமர்ப்பித்துக்கொண்ட அறிக்கையிற் சிபார்சு செய்திருக்கிறார். கொன்ஸ்டபிளின சம்பளம் 80 ரூபாவரை உயரவேண்டுமென்றும் அவர் கூறினார்.

பொலீஸ் படைக்கு மேலும்மேலும் ஆட்களைச் சேர்ப்பதற்காக அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவது விரும்பத்தக்கதுதான் என்று நிர்வாகசபை அந்த யோசனையை ஏற்றுக்கொண்டிருப்பதாக அறியப்படுகிறது.

### உத்தேசிக்கப்பட்டிருக்கும் திட்டம்

பொலீஸ் படையிற் சேர்ந்த ஒருவருக்குப் பயிற்சிக்காலத்தில் 40 ரூபாய் சம்பளமும் பயிற்சி முடிந்து அவர் அதிற் சித்தியடைந்து வெளி வந்தபின் 45 ரூபாய் சம்பளமும் கொடுக்கவேண்டுமென்றும் கொன்ஸ்டபிள்களுக்குக் கொடுக்கும் ஆகக்கூடுதலான சம்பளம் 75 ரூபாயாக இருக்கவேண்டுமென்றும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பளத்துக்கு அதிகமாக ஒரு கொன்ஸ்டபிளுக்குக் கிடைக்க வேண்டுமாயின் அவர் ஸார்ஜண்ட் பதவிக்கு உயர்த்தப்படவேண்டும்.

எப்படியிருப்பினும் இந்த விஷயத்தில ஒரு தீர்மானத்துக்கு வருமுன் இந்தத் திட்டத்தை மேலும் ஆலோசிக்கவேண்டுமென்று உள்நாட்டு நிர்வாகசபை தனது சென்ற கூட்டத்தில் தீர்மானித்ததாகத் தெரிகிறது.

## அதிக லாபத்திற்கு உருளைக் கிழங்கு விற்றவர்

யாழ்ப்பாணம் யூன் 15—

உணவுப் பொருட்களிற் கொள்ளை லாபமடிப்பது பொதுமக்களுக்குப் பெரிய இடைஞ்சலாக விருந்து வருகிறதென்று யாழ்ப்பாணம் நீதிபதி மிஸ்டர். ஜே. ஈ. ஏ. அலிஸ் பெரிய கடைத் தெருவில வியாபாரஞ் செய்யும் காசிப்பிள்ளை குழந்தைவேலு என்பவர்மீது 6 வாரக் கடுஞ்சிறைத் தண்டனை விதித்தபோது குறிப்பிட்டார்.

ஒரு றூத்தல் உருளைக் கிழங்கின் கட்டுப்பாட்டு விலை 30 சதமாக விருக்க 2 றூத்தல் உருளைக்கிழங்கை 70 சதத்துக்கு விற்றதாகவும் அதற்குப் பற்றுச்சீட்டுக் கொடுக்க மறுத்ததாகவும் குழந்தைவேலு குற்றஞ் சாட்டப்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரணஞு
ஆனிமீ ௬௨ திங்கட்கிழமை

## கல்வி மந்திரியின் பேச்சு

III

வித்தியாசாலைகளை வைத்து நடத்தும் அதிபர்கள் (மனேச்சர்மார்) என்றிருப்பவருட் சிலரும், சங்கங்கள் சபைகளுட் சிலவும் தங்கள் தங்களால் நடத்தப்படும் வித்தியாசாலைகளைச் சுயகலங் கருதிய வியாபார முறையிலே வைத்து நடத்தி அதிக பொருளைத் தேடிக் கொள்ளுகிறார்களென்று கல்விமந்திரி கூறியுள்ளார். வித்தியாசாலைக்குரிய ஆசிரியர்களைப் புதியவராய் நியமிக்கும் விஷயத்திலே பணமில்லாதவர்கள் கல்வித் திறமையுடையவர்களாயிருந்தாலும் இடம் பெறுதல் அரிதாகவிருக்கின்றது; ஒரு உபாத்தியாயர் நியமனம் பெறவேண்டுமாயின் அவர் இடம் பெறும் பள்ளிக்கூடத்தின் அதிகாரிக்கோ அதிகாரிகளுக்கோ ஏதோ கைப்பணங் கொடுத்துச் சேரவேண்டுமாம்; பின் தமது மாச வேதனத்திலும் ஒரு பாகம் குறித்த அதிகாரிக்கு இல்லையேல் அதிகாரிகளுக்குக் கிரமமாகவும் இரகசியமாகவும் கொடுத்துவர வேண்டியதாம். இந்த நிபந்தனைகளுக்கு இணங்கா தொழிவரேல், அந்த உபாத்தியாயர் பள்ளிக்கூடத்தில் இடம்பெறுதலும், ஒருவாறு பெற்றாலும் நீடித்த காலம் அங்கிருந்து படிப்பித்தலும் முடியாத கருமங்களாம். வித்தியாசாலை அதிகாரிகளும் உபாத்தியாயருக்கு மிடையேயுள்ள இந்த அந்தரங்கமான உடன்படிக்கை, இருபகுதியார்க்கு மிடையில் யாதாயினும் மாறுதல் மனஸ்தாபம் முதலியன ஏற்படுங் காலத்தில் வெளிவருதலும், முன்பு வித்தியாபகுதியாருக்குத் தெரிவிக்கப்படுதலும், அதிகாரி அப்பதவியினின்று விலக்கப்படுதலும் இடையிடையே நிகழ்வது பலரறிந்த இரகசியம். இன்னுமொரு காரணம் பற்றியும் முகமன் பாராதும் பணத்துக்கு ஆசைப்பட்டும் திறமை வாய்ந்த உபாத்தியாயர் விலக்கப்பட, திறமையற்ற உபாத்தியாயர்கள் இடம் பெறுவரேல், குறித்த பள்ளிக்கூடங்களிற் கல்வி பயிலும் பிள்ளைகள் தோஷமடைவார்களென எவருங் காதிருப்பது வீணல்லவா?

இனி, சமயாபிமானம்பற்றி, கிறிஸ்தவ பள்ளிக்கூடங்களில் தகுதியுடைய உபாத்தியாயரைத் தலைமையாசிரியராக நியமிப்பதில் விடுத்துக் குருமாரை வற்புறுத்திச் சொல்லுவாரைத் தலைமை உபாத்தியாயராக நியமிக்கிறார்களென்றும், கிறிஸ்தவ பள்ளிக்கூடத்திலே கல்வி பயிற்றும் ஒரு கிறிஸ்தவ உபாத்தியாயர் சைவப் பெண்ணொருத்தியை மனைவியாகக் கொண்டால் அக் கிறிஸ்தவ பள்ளிக்கூட அதிகாரி அந்த உபாத்தியாயரை வேலையிலிருந்து கழற்றிவிட வழிதேடுகிறாரென்றும் கல்விமந்திரி தெரிவிக்கிறார். அச் செயல் பொதுப் பணத்தின் உதவியைக்கொண்டு கிறிஸ்தவர் தங்கள் மதத்தைப் பரப்புகின்ற காரச் செய்யும் உபாயமென்பதை எடுத்துக் காட்டுகின்றமை நிசம். எங்கள் சைவப் பள்ளிக்கூடங்கள் சிலவற்றிலே அதிகாரிகளாயுள்ளவர்கள் திறமை வாய்ந்த சைவசமய உபாத்தியாயர் இருப்பவும் திறமை குறைந்த கிறீஸ்தவ உபாத்தியாயரை இன்னும் தலைமையாசிரியராகவும் உதவியாசிரியராகவும் ஏற்று நியமித்திருத்தலை நாம காணுகின்றோம். இந்தச் சைவ அதிகாரிகள் இப்படிச் செய்வதற்குக் காரணம் சமயாபிமானமில்லாமையும் சுயநலங் கருதுதலுமேயாம். சமயாபிமானமுற்றவர்களும் எம் மதமும் தமக்குச் சம்மதமானதென்னுள்ளவர்களுமாகிய வித்தியாசாலை அதிகாரிகளும், உபாத்தியாயர்களும் கருமம் பார்க்கும்போது சைவப் பிள்ளைகள் சைவமுறைப்படி சைவ வித்தியாசாலைகளிற் கல்வி பயிலுதல் அசாத்தியமாகும். மதக்கட்சி முறைப்படி வித்தியாசாலைகள் நடத்தப்படுமானால் எக்காலமும் கிறிஸ்தவ வித்தியாசாலைகளும் அந்த மதமுந் தலைப்பட்டு சிறக்குமே பொழிய ஏனைய மதக்கட்சி வித்தியாசாலைகள் நன்மை யடையா வா?

---

## களவுக்குச் சவுக்கடித் தண்டனை

யாழ்ப்பாணம் யூன் 15

இரத்தினபுரியில் வியாபாரஞ் செய்பவரான திரு. எஸ். சுப்ரமணியத்திடம் பணியாளாக இருந்த இராமசாமி கந்தையா என்பவர் ரூபாய் 110 50 பெறுமதியுள்ள ஒரு தங்க மோதிரம், பணம், துணி ஆகியவைகளைத் திருடியதாக யாழ்ப்பாணம் பொலீஸ்கோட்டில் குற்றஞ்சாட்டப்பட்டார்.

எதிரி தான் குற்றவாளியென்பதை ஒப்புக்கொண்டார். எதிரிக்கு 6 சவுக்கடித் தண்டனை வழங்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

கோட் ஸார்ஜன்ட் எதிரிக்குக் குறித்த தண்டனையைக் கோட்டில் வைத்து நிறைவேற்றினர்.

---

## ஸோபியன் தீவில் நேசப்படை இறங்கிற்று

வாஷிங்டன் ஜூன் 17—

ஜப்பானியர்கள் ஸோபியன் தீவில் இரண்டு புவிஷ அருப்புகளை உபயோகித்து வருவதாகத் தெரியவருகிறது. இங்கு அமெரிக்கத் துருப்புகள் இறங்கியிருக்கின்றன.

ஒருசமயத்தில் சமுத்திர முன்னணி ஸ்தலங்களிலிருந்து அமெரிக்கர்கள் பின்வாங்கவேண்டியதாயிற்று. சத்துருக்கள் வெகு உக்கிரமாகத் தாக்கினர். ஆனால் நேசத்தச யுத்தக் கப்பல்கள் உதவிக்கு வந்து, அமெரிக்கர்கள் ... முன்னேற்றம் ஆரம்பித்திருக்கின்றனர்.

இலக்கியப் பகுதி:

# குறுந்தொகை

[ க. கி. ந. ]

II

இந்நூலின் இறுதியில் "இத்தொகை முடித்தான் பூரிக்கோ; இத்தொகை பாடிய கவிகள் இருநூற்றைவர். இத்தொகை நாலடிச் சிற்றெல்லையாகவும் எட்டடிப் பேரெல்லையாகவும் தொகுக்கப்பட்டது" என்னுங் குறிப்புக் காணப்படுகின்றது. எனவே, தொகுப்பித்தோர் யாவரென்பது தெரியாத போதினும், இந்நூலைத் தொகுத்தோர் பூரிக்கோ என்பதும், இத்தொகை நூலிலுள்ள பாக்களைப் பாடிய புலவர்கள் தொகை இருநூற்றைவர் என்பதும், இந்நூலுள்ள பாக்கள் நாலடிச் சிற்றெல்லையையும் எட்டடிப் பேரெல்லையையும் உடையன என்பதும் பெறப்படுகின்றன. எனினும், இந்நூலுள் பாரதம் பாடிய பெருந்தேவனார் முதல் அம்மூவனார் இறுதியாக 206 பெயர்கள் காணப்படுகின்றன. எனவே, ஒருபெயர் மேலதிகமாகக் காணப்படுகின்றது. அன்றியும் இந்நூலிலுள்ள காப்பு உட்பட 402 செய்யுட்களில், 10 செய்யுளுக்கு ஆசிரியர்கள் பெயர் காணப்படவில்லை. அது மட்டுமன்று, "இத்தொகை நாலடிச் சிற்றெல்லையாகவும் எட்டடிப் பேரெல்லையாகவும் தொகுக்கப் பட்டது" என்னுங் குறிப்புக்கு மாறாகவும் இரு செய்யுட்கள் காணப்படுகின்றன. அவை யாவன, 307, 391 ஆகிய இரு செய்யுட்களுமாம். இவை தனித்தனி ஒன்பதடிகளையுடையனவாக இருத்தலை நூல் (சாமிநாதையர் பதிப்பு) நோக்கிக் கண்டுகொள்க. ஆகவே, இவை ஆராயத்தக்கனவாம். இதுவேயுமன்றி, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு என்பவற்றுள்ளே நற்றிணை அகநானூறு என்னும் இரண்டும் கடவுள் வாழ்த்தொழியத் தனித்தனி 400 செய்யுட்களை உடையன. அவற்றின் இனத்தைச் சேர்ந்த குறுந்தொகை மாத்திரம் கடவுள் வாழ்த்தொழிய, 401 செய்யுட்களை, (அஃதாவது ஒரு செய்யுளை மேலதிகமாகக்) கொண்டிருப்பது அத்துணைப் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. பாடிய புலவர் தொகை இருநூற்றைவர் என இறுதிக் குறிப்புகூற, அதற்கு மேலதிகமாக ஒருவர் பெயர் காணப்படுவதும் முரண்பாட்டை விளைக்கின்றது. இவ்விரு நியாயங்களுஞ் சேர்ந்து, குறுந்தொகையும் 400 செய்யுட்களையுடையதாக இருத்தல் வேண்டுமென்றும், ஏதோ தவறுதலாக ஒரு செய்யுள் மேலதிகமாக இதனுட் சேர்க்கப்பட்டு விட்டது போலும் என்றும் ஊகிக்க இடந்தருகின்றன. எனவே, இதுவும் மேலனவற்றோடு புடைபட வைத்து ஆராயப்படவேண்டிய தொன்றும்' கிறது.

இவ்வரிய தொகை நூலுக்குப் பழையதோர் உரை இருந்ததென்றும், அது பேராசிரியர், நச்சினார்க்கினியர் என்னும் இருவராலும் எழுதப்பட்டதென்றும், அவருள்ளே பேராசிரியர் இருபது செய்யுள்கட்கு மாத்திரம் உரை எழுதாது விட்டனர் எனவும், அவ்வாறு விடப்பட்ட இருபது செய்யுள்கட்கும் நச்சினார்க்கினியர் உரை எழுதி முடித்தார் என்றும் கூறப்படுகின்றது. இதற்கு ஆதாரம் வருமாறு:-

நச்சினார்க்கினியர் உரை வகுத்த நூல்களைத் தொகுத்துரைக்குஞ் செய்யுளாகிய

"பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட்டுங்கலியும்
ஆரக் குறுந்தொகையு ளைந்நான்குஞ்—சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னார்க்கினிய மே"

என்னும் இதனுள் "குறுந்தொகையுள் ஐஞ்ஞான்கும்" எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றமை ஒன்று. நச்சினார்க்கினியர் உரைச்சிறப்புப் பாயிரம் ஒன்றனுள்ளே,

"நல்லறி வுடைய தொல்பே ராசான்
கல்வியுங் காட்சியுங் காசினி யறியப்
பொருள்தெரி குறுந்தொகை யிருபது பாட்டிற்கு
இதுபொரு ளென்றவ னெழுதா தொழிய
இதுபொரு ளென்றதற் கேற்ப உரைத்து"

என்று வருகின்றமை மற்றொன்று.

ஆயின், இவை இரண்டும் நச்சினார்க்கினியரின் உரையின் சிறப்புக் கூறவந்த விடத்து, உரைச்சிறப்புப் பாயிரத்தின் கண்ணே கூறப்பட்டிருக்கின்றனவேயன்றி, பேராசிரியரேனும் நச்சினார்க்கினியரேனும், தாம தொல்காப்பியத்திற்கு எழுதிய உரையிலேனும், வேறு நூல்களுக்கு எழுதியுள்ள உரையிலேனும் யாண்டும் இதைப்பற்றிக் குறிப்பிடவில்லை யாதலானும், தொல்காப்பியத்துக்கு உரைகண்ட பேராசிரியரல்லர், திருக்கோவையாருக்கு உரைகண்டவரே இப் பேராசிரியர் என்று கொள்ளினும், திருக் கோவையாருரையைக் கொண்டு அவ்வுரைகாரர் குறுந்தொகைக்கு உரைஎழுதினர் என்று கோடற்கு இடமில்லையாதலானும், பேராசிரியர் பெயரைப் பேராசான் என்று குறித்தல் இந்த ஓரிடத்தேயன்றி, நூல்களுள்ளே வேறு எவ்விடத்துங் காணப்படாமையானும், 'நல்லறிவுடைய தொல்பேராசான்' என்னுந் தொடரொன்று "கற்றறிவு வாய்ந்த பழைமையான பெருமை பொருந்திய ஆசிரியன்" எனப் பொருள் பயந்து அக்காலத்திற் பேராசிரியனுத் திகழ்ந்த ஒருவரைக் குறித்திருக்கக் கூடுமாதலானும், இவை போன்ற பிற காரணங்களாலும் குறித்த உரைச்சிறப்புப்பாயிரக் கூற்று ஆக்ஷேபிக்கத் தக்கது என்று கூறுவாரும் உளர். எனவே, இஃது ஆராய்ச்சிக்குரிய விஷயமாம். ஆயினு மென்? குறுந்தொகையின் பழையவுரை நமக்குக் கிடைக்கவில்லை. அது முயற்கொம்போ? யாரறிவார். டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்கள் உரையே இப்போது கிடைப்பதாகும். எனினும், தொல்காப்பியம் முதலிய நூல்களுக்கு உரை கூறுமிடத்து, உரையாசிரியர்கள் பலரொலாலும் இக்குறுந்தொகைச் செய்யுட்களிற் பல எடுத்தாளப்பட்டிருக்கின்றன. அங்ஙனம் எடுத்தாளப்படுங்கால், புலத்துறை முற்றிய அவ்வுரையாசிரியர்களால் அவ்வச் செய்யுள்கட்கு உரை நுட்பமும் விரிக்கப்பட்டிருக்கின்றது. உதாரணமாக, தொல். களவியல் 101ம் சூத்திரவுரையில், நச்சினார்க்கினியர் குறுந்தொகை 2ம் செய்யுளை

(கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப் ாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் று) அரிவை கூந்தலின்
நறியவு முளவோநீ அறியும் பூவே)

எடுத்தாளுகின்றார். எடுத்தாளுங்கால், "இதனுள், 'தும்பீ' என்றது

தொடர்ச்சி ௬-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரிமனங் குவியும் வேளை

[வித்துவான் - முத்து சு. மாணிக்கவாசகனார்]

தாயுமானவர் "விரிந்த மனமொடுக்கும் வேளையினு னுகப்பாக அருள்வாழி பதியே பராபரமே" என்றும், "எத்தனை விதங்கள் தாம் கற்பினும்கேட்பினுமென் இதயமும் ஒடுங்கவில்லை" என்றும், "சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது", என்றும், பாழான என மனம் குவிய ஒரு தந்திரம் பண்ணுவது உனக்கு அருமையோ' என்றும், "ஆடிய சுறங்குபோல் ஓடி உழல் சிந்தையை அடக்கி ஒரு கணமேனும் யான் காணிலேன்" என்றும் பிறவாறும், பலபடியாகப் பாடியருளினர். 'அவர்க்கு மனம் விரிந்து குவியாதிருந்தது. அதனால் அது குவியும் வேளையை வேண்டினர்' என்று முடிவுகட்டித் தம் மனத்தைப்பற்றிக் கவலைகொள்ளாதார் பலர். இவர்கள் மனம் கிருமியைப் போல ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றிப் பாழாவது. இப்பாழ் மனம் கொலை முதலிய ஐம்பெரும் பாவங்கட்கும் ஆட்சிக்களமாகும். மனம் விரிந்து குவிந்தும் ஒருநிலைப் படாதிருக்கும் வரை இன்ப துன்பம் மாறிமாறி வந்துகொண்டிருக்கும். விரியும் போது துன்பமும் குவியும்போது இன்பமும் உண்டாதல் அநுபவம். இதுவே இன்பதுன்பக் கலப்புடைய வாழ்விற்குக் காரணம். இவ்வின்ப துன்ப நிலையினின்றும் நீங்கி இன்பநிலை ஒன்றே நாடி அது பெறுங்காறும் உயிர்க்கு எளிதில் வாராது. இன்பதுன்பக் கலப்புடைய நிலையினும் துன்பமேயுள்ள நிலையினும் அநுபவமுற்ற உயிர்க்கு இன்பமேயுள்ள தனிப்பெரு நிலையில் வேட்கையுண்டாகும். அப்போதுதான் அவ்வுயிர்கள் தாயுமானவர் அருளியபடி, பின் விரியாத வகையில் மனம் குவியும் வேளையை வேண்டும். இன்பநிலையைத் தெரிவிக்கும் 'கூடுதலுடன் பிரிதலற்ற' எனத் தொடங்கும் தாயுமானவர் திருப்பாடலை இங்குக் கருதவேண்டும். அப்பேரின்ப நிலையைப் பெறுதற்கே அறிவு, மறை, சமயம் முதலிய சாதனங்கள் உயிர்க்கு வாய்த்துள்ளன. இச்சாதனங்களிலிருந்தும் இவற்றைப் பொருள்படக் கொள்ளாமல் உயிர்கள் இன்ப துன்ப நிலையில் ஏன் உழலுகின்றன? வினைவலை விட்டது!

"வானந் தண்டுளி தலைஇ
யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்
யாற்று
நீர் வழிப் படூஉம் புணைபோ
லாருயிர்
முறைவழிப் படூஉம் என்பது
திறவோர்
காட்சியிற் றெளிந்த" வாய்மை
யன்றோ?

செய்வினை நல்வினையாயின் அது உயிரைத் துன்ப நிலைக்கும் இன்ப துன்ப நிலைக்குங்கொண்டு செலுத்தாமல் இன்ப நிலைக்கே செலுத்தும். 'வினைவிளைத்தவன் வினையறுப்பான்' என்பது இருவினைக்கும் பொது. நல்வினைப் பிரிவுகளுள் ஒன்றன் சிறப்பைத் திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய ஒரு திருப்பாட்டு நன்கு விளக்குகின்றது. அது,

"அவ்வினைக் கிவ்வினையாம் என்று
சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது உந்தம
க். கூனமன்றே?
கைவினை செய்தெம் பிரான்
கழல் போற்றுதும் நாம் அடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்
டப்பெறா திருநீல கண்டம்"

என்பது முற்பிறப்பில் செய்த வினையே இப்பிறப்பில் அனுபவிக்கப்படுகின்றது என்பதை அறிபவர்களே! இவ்வினையின் நீங்கி உய்தி பெற விரும்பாதது குற்றமன்றோ? அவ்வினை எவ்வாறு நீங்கும்? சிவ நல்வினையாகிய சிவபூஜை முதலியவற்றைச் செய்தால்தான் நீங்கும். இவ்வுண்மையைத் திருநீலகண்டத்தின்மேல் ஆணைவைத்துக் கூறிய நெறியும் பான்மையை அறிந்து மனங் குவியும் வழியை நாடுதல் ஒவ்வோருயிர்க்கும் உற்ற கடமையாகும்.

அத்தகைய உய்தியைப்பெற முதன்முதலாகப் பற்றவேண்டியது பொய்யாமை. அதைப் பெற்றால் தவவிரதம், சீலம், இரக்கம், ஈகை, மமதை நீக்கம், அகந்தையின்மை என்பவை முறையாகத் தாமே வரும். அதன்பின் மனம் குவிந்தே விடும் மோனநிலை உண்டாகும். பின் விரிவை அடையாது இம்மனக் குவிவு உண்டாகும் வகையில் கற்றலும் கேட்டலும் உடையவரே பெரியோர். 'கற்றலிற் கேட்டலே நன்று' 'கேட்டலுடையார் பெரியார்' என்று இவரையே குறித்தல் காண்க. அகந்தை தொலைய மமதை அகலும். மமதை அகல ஈகை எய்தும். ஈகை எய்த இரக்கம் இயல்பாகக் காரணமாய் முன்பே தோன்றிவிடும். இரக்கம் தோன்றச் சீலம் சிறந்து விளங்கும். சீலஞ்சிறக்கத் தவ விரதம் தவறாமல் வேண்டும். அவ்விரதம் பொய்யாமையை அடிப்படையாகக் கொண்டது. இவ்வாறு ஒழுக்காக இல்லாதது பிறர் கேட்கப் போதிக்கவே கற்றதும் கேட்டதுமான கல்வியறிவாய் வெறும் போலியாய்ப் போம். இதனை "எத்தனை விதங்கள்தாம்" எனத் தொடங்கும் தாயுமானவர் விளக்கியருளினர். 'அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பர், உளக்கோயிற்கு ஏற்றும் விளக்கும்', "யான் எனது என்றற்ற இடமே திருவடி" 'மோன பானந்த முடி' கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்' என்பவற்றை ஆராய்ந்து எண்ணுக.

"இடம்பெறு வீடுமின் னார்சேய்
சகமும் இருநிதியும்
உடம்பைவிட் டாருயிர் போம்
போது கூடி யுடனவருமோ
மடம்பெறு மாயை மனமே!
இனி இங்கு வாமௌனி
திடம்பெற வைத்த மௌனம்
சகாயம் தெரிந்துகொள்ளே"

"அற்ப மனமே அகிலவாழ் வித்
தனையுஞ்
சொற்பனங்கண் டாய்உண்மை
சொன்னேன்நான்—கற்பனையா
னில்லா இடத்தே எனைச்சும்மா
வைத்திருக்கக்
கல்லாய்நீ தானோர் கவி"
—தாயுமானார் பாடல்கள்
—சித்தாந்தம்

## அறிவித்தல்

நல்லூர் வேலுப்பிள்ளை குமாரசுவாமியாகிய நான் அவ்வூர்ச் சின்னத்தம்பி பெண் கனகம்மாவிற்கு 1939ம் ஆண்டு நவம்பர்மாதம் 2ந் திகதி கொடுத்த நோட்டு ஓர் பொருத்த நோட்டென்றும் சொல்லப்பட்ட கனகம்மா பொருத்தத்தை மீறிவிட்டதால் அந்நோட்டிற்கு யாதொரு பெறுமதியில்லை யென்றும் இந்த நோட்டுச சாட்டுதலை வாங்கி ஒருவரும் ஏமாந்துபோக வேண்டாமென்று இத்தால் அறிவிக்கிறேன்.

வே. குமாரசாமி,
நல்லூர்.
14.6.44.

Mis [illegible] 19-6-44

# சம்பந்தர்

(திருமயிலை திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்)

நமது சைவசமய குரவர் நால்வருள் திருஞான சம்பந்தர் மட்டும் அதிகமாகப் பதினொராந்திருமுறையிலும் பெரிய புராணத்திலும் பாராட்டப்பட்டமைக்குக் காரணம் இன்னதென்று ஆராய்வதே இக்கட்டுரையின் முழு நோக்கமாகும்.

சிவபாத இருதயர் என்னும் அந்தணர் பெருமான் மகா சிவ பக்தர். அவர் காலத்தில் சைனம் முதலிய புறப்புறச் சமயங்கள் சைவத்தின் வளர்ச்சிக்குக் கேடு விளைப்பதைக் கண்டபோது மனஞ் சகியாது சைவப் பயிரை வளர்க்கத்தக்க ஓர் குமாரனைத் தமக்குத் தந்தருளும்படி தோணியப்பரை நோக்கித் தவங் கிடந்தார். அங்ஙனமே சுவாமிநாதர் அவருக்கு ஓர் ஆண்மகவைத் தந்தருளினர். இப்புதல்வரே ஞானசம்பந்தராகிய சாமுசித்தர். சாமுசித்தராவார் முற்பிறவிகளிலே சரியை, கிரியை, யோகம் முதலிய மார்க்கங்களிற் றலைசிறந்து இப்பிறப்பில் ஞானத்தோடு விளங்குபவர். இவர் அதீத ஞானத்தைப் பெற்றிருந்தமையால் இவரைச் சுப்பிரமணியர் அவதாரமென்று கூறுப. அருணகிரியார், சிதம்பர சுவாமிகள் முதலியோர் சம்பந்த செய்த அற்புதங்களைச் சுப்பிரமணியர் மேல் ஏற்றிக் கூறுவர். சுப்பிரமணியருக்கும் சிவபெருமானுக்கும் பேதமின்மையால் சம்பந்தரைச் சுப்பிரமணியர் அவதாரமென்று கூறுதல் சைவசித்தாந்த சாத்திரத்திற்கு விரோதமாகும். சண்டேசுரர் பதவியைப் பெற்ற சண்டேசுர நாயனார் போல சுப்பிரமணியர் பதவியைப் பெற்ற ஓர் பக்குவ ஆன்மாவாகலா. ஆனம் சம்பந்தராக எழுந்தருளியது என்று சொல்லலாம். இவருக்கும் சிவபெருமானுக்கும் இருந்த தொடர்பு மகனுக்கும் தந்தைக்குமுள்ளதை ஒக்கும். பிள்ளையார் என்று இவருக்கு வழங்கப்படும் பெயரும், தேவாரப் பாடல்களும், பெரியபுராணமும் அத்தொடர்பை மெய்ப்படுத்தும்.

சிவஞானத்தைப் பாலாகக் குழைத்து சிவசத்தியே இவருக்கு ஊட்டியருளியதென்றால் இவர் மகிமையை என்னென்று இயம்புவது! பிள்ளையாருக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் தாதையாகிய சிவபெருமானே அமைத்துக் கொடுத்தார். இவருக்குச் சிவபெருமான் காட்சியளித்த தெல்லாம் தடத்த உருவத்தோடேயாம். ஏனையநாயன்மார்களுக்கெல்லாம் மானுடச்சட்டை தாங்கி வந்தார். சிவபெருமானது உண்மைச்சொரூப மாயைக்கு அப்பாற்பட்டது; அருவே திருமேனியாகக் கொண்டது. இவ்வுருவம் சுவாமிகள் போன்ற அதீத நிலையிலுள்ளவர்களுக்கே புலப்படும். சிவபெருமான் குளத்தங்கரையில் சம்பந்தருக்குக் காட்சியளித்த போது சிவபாத இருதயருக்கு அக்காட்சி புலப்படாததே இருவர் நிலைக்குமுள்ள வித்தியாசத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

இவர் தமது மூன்றும் வயது முதல் பதினாறும் வயதுவரையில் அவாவது பதின்மூன்று வருட காலம் தமிழ்நாட்டில் பல இடங்களுக்குச் சென்று தமது தேவாரப் பாடல்கள் மூலமாகவும் பல அற்புதங்கள் மூலமாகவும் சைவத்தைப் பரப்பிப்புறச்சமயங்களைக் களைந்தார். அற்புதங்கள் அல்லது சித்திகள் ஞானிகளுக்கு ஏற்றதன்றேயாயினும் சுவாமிகள் அவற்றை அதிகமாகக் கையாண்டது என்னென்னில் மக்கள் கொள்கைகளைத் தக்க முறையாக ஒருவர்க்கொருவர் ஆராய்ந்து வாதிப்பதினும் பார்க்க இவை சாமானியசனங்களை எளிதில் கவரக்கூடியவையாயிருப்பதேயாம். இவருடைய அற்புதங்களிற் சில தாமாகச் செய்தவை அல்ல; சிவபெருமானால் தம்மீது புகுத்தப்பட்டவை. ஞானப்பால், பொற்றாளம், முத்துப்பந்தர், முத்துப்பல்லக்கு முதலியன இவர் விரும்பியவையல்ல. சிவபெருமானால் இவருக்கு அருளப்பட்டவையாகும். தந்தை தனது குமாரனை அலங்கரித்து அழகு பார்ப்பதுபோல் சிவபெருமான் நமதுபிள்ளையாரை வேண்டிய அளவு டாம்பீகப்படுத்திப் புறச்சமயங்களை அவர்மூலமாகக் களைவித்தார். சைவர்களுக்குக் கொள்ளை கொள்ள வீடுதவினர். பிள்ளையாரிடத்தில் விளங்கிய அற்புதங்களாவன:—

1. உமாதேவியார் தந்த திருமுலைப்பாலை உண்டது.

2. பொற்றாளம், முத்துப்பல்லக்கு, முத்துச்சின்னம், முத்துக்குடை, முத்துப்பந்தர், உலவாக்கிழி, படிக்காசு முதலியன சிவபெருமான் கொடுக்கப்பெற்றது.

3. வேதாரணியத்திலே திருக்கதவு அடைக்கப் பாடியது.

4. பாலை நிலத்தை நெய்தலாக்கியது.

5. பாண்டியனது கூனையுஞ் சுரத்தையும் போக்கி நின்றசீர்நெடுமாறனாக்கியது.

6. தேவார ஏட்டை அக்கினியிலிட்டுப் பச்சையாக எடுத்தது.

7. ஆற்றிலேயிட்ட ஏட்டை எதிரேறச் செய்தது.

8. புத்தன் தலையிலே இடிபிடிக்கச் செய்தது.

9. ஓடத்தைத் தமது பதிகத்தால் அக்கரை சேர்த்தது.

10. ஆண்பனையைப் பெண்பனையாக்கியது.

11. விஷத்தினால் இறந்த செட்டியை உயிர்ப்பித்தது.

12. எலும்பைப் பெண்ணாக்கியது.

13. தமது திருமணத்தைத் தரிசிக்க வந்தவர்களுக்கெல்லாம் வீடளித்தது.

மற்றைய மூன்று சமய குரவர்களிடத்து இத்தனை அற்புதங்கள் நிகழவில்லை. சுவாமிகள் பிள்ளையாரென்னும் பெயருக்கேற்ப தமது தாதையாரது பஞ்சகிருத்தியங்களையும் செய்து காட்டியுள்ளார்:—

"தவந்த வெண்பிணைப் பெண்ணெ
னப் படைத்துஞ் சார்மழுவன்
உவந்த பெண்ணுயிரளித்து மொட்
டா தெதிர்புத்தன்
இவந்த சென்னியை யுருட்டியு
முத்தொழில் திருவி
பவந்தடுத் துயிர்களுஞ் சொற்பன
வண்ணப் பணிவாம்"

என்னும் கச்சியப்ப முனிவர் துதியை நோக்கவும், சுவாமிகள் பரசமயங்களை நிராகரித்துச் சைவத்தை நாட்ட வந்தவராகலின் தாம் அருளிச் செய்த ஒவ்வொரு பதிகத்திலும் சைவத்தின் ஏற்றத்தையும் பௌத்தம் சைனம் முதலியவற்றின் தாழ்வையும் எடுத்துக்கூறுவர். இவருடைய தேவாரங்களுள் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் இலக்கணங்களும் விரவியுள்ளன. இதனால் இவருக்கு முத்தமிழ் விரகர் என்னும் பெயரும் உண்டாயது. இவரைப் பரசமய கோளரி, சைகாமணி, பாலறாவாயர், தமிழாகரன், சண்பைக் காவலன், கவுணியர் தலைவன், சிவஞானசம்பந்தர் முதலிய பல பெயர்க

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கண்ணப்பன் கண்ணப்பக் கண்டுவந்தார்'

[ஆசிரியர் திரு. சி. செல்லத்துரை அவர்கள், தெல்லிப்பழை]

"எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவிதான் யாதினும் அரிது காண்" என்று கூறினர் ஒரு பெரியார். உண்மைதான். மணிவாசகப்பெருமானும் "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய் வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்செல்லாஅநின்றஇத் தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான" என்று கூறுமிடத்து நடுநாயகமாய் வைக்கப்பட்டதும், "மக்கள் யாக்கையிற் பிறத்தலு மரிதே" என ஒளவையாரால் சிறப்பித்துச் சொல்லப்பட்டதும் அப்பிறவியன்றே. அப்பிறவியிலும் உயர்வுந் தாழ்வும் உடையோராய்ப் பிறத்தல இருவினையின் பயனளவிற்கு ஏற்ப அமைந்ததாகும். இடையறாப் பேரன்பு பூண்டவராயின் இறைவனுக்கு உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பேதமே இல்லை. விரதம் தவம் முதலிய அரிய செயல்களின்றி இறைவன் திருவருளைப் பெறுதல் கூடும் என்று கருதுகின்றனர் பலர். அவை இறைவனைக் காணவல்ல இலகுவான வழிகளாகா. "அன்பே சிவமாய் அமர்ந்திருப்பவனை 'அன்பே சிவமாய்,' அறிந்துணருந் தன்மையோரே இலகுவிற் காணற்குரியர். இறைவனைப் பெயராப் பிரியவொட்டாமற் பிணிக்கத் தகுந்தது அன்பெனுங் கயிறே.

"இன்னையும் யான கட்டுவேனல் மாபாரதம் வாராமற் காக்கலாம்" என்ற சகாதேவனை நோக்கி கிருஷ்ணபகவான் முறுவலித்து என்னையுங் கட்டுவாயா? உன சாமர்த்தியத்தைப் பார்ப்போம் என்றனர். சகாதேவனும் "மூலமாக மேதற்ற முணர்ந்து எவ்வுலகுந் தாஆய அடியிணைகள் தங்கருத்தினிற் பிணித்தான. கண்ட பகவான "அன்பாலின்றெனை யறிந்தே பிணித்தமை நன்று என்பாதந் தன்னை விடுக" என்றனனன்றே; அன்பின் அபூர்வ சக்தியை அளவிட முடியுமா? மனோதீதமாய்ச் சர்வ வியாபகமாய் இருக்கும் இறைவனை அகப்படச் செய்வது மிக இலகுவான செயலன்று. அதனை அன்பினால் இலகுவாகச் செய்துவிட்டனர் அடியார்கள். அன்பை அன்பாகவே கொண்டுய்ந்த பெரியார்களுட் "கண்ணப்பர்" மிக விசேடம் பெற்றவராவர்.

"கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை கண்டபின்" என மணிவாசகப் பெருமானும், "நாளாறிற் கண்ணிடந்தப்ப வல்லேனல்லேன்" எனப் பட்டினத்தடிகளும் இவர் அன்பின் திறத்தை வியந்தனர் என்றால் நாம கூறுதல் மிகையாகும். கண்ணப்பர் "வெல்படைத் தறுகண் வெஞ்சொல் வேட்டுவர்" குடியிற்றோன்றியவர். அக்குடிபிறந்தோன்றிய அவரை நம்பியாரூரராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் "கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்" என்று திருத்தொண்டத் தொகையிற் சிறப்படைமொழி கொடுத்துக் கூறியிருக்கின்றனர். "கலைமலிந்த சீர்நம்பி" என்னுந் தொடருக்கு ஒரு சாரார், சகல கலைகளுமுணர்ந்த சிறப்பினையுடைய நம்பி என்றும், இன்னொரு சாரார் எல்லாநூல்களாலும் விதந்தோதப்பட்ட அன்பின் சிறப்பினை உடைய நம்பி என்றும் பொருள் கொள்ளுகின்றனர்.

இவ்வாறு பொருளும் பொருந்துமாறு சேக்கிழார் பெருமான், நாயனார் வரலாற்றில் "முன்பு செய் தவத்தினீட்டம் முடிவிலா இன்பமான அன்பினை எடுத்துக்காட்ட" என்று கூறிய செய்யுட்டொடரை ஆராயும்பொழுது காணலாம். சகல கலைஞானங்கள் நிறைந்தவனும், ஐவரில் ஒருவனுமாகிய அருச்சுனனும் பாரதப்போர் வெல்லுமாறு பாசுபதாஸ்திரம் பெறுவான நினைந்து திருக்கைலாச மலையிற் தவம் புரிந்தனன். இறைவன் வெளிப்பட்டதும் அஸ்திரம் பெறுவதை விட்டு முத்தியை உதவுமாறு வேண்டினன். இறைவன அவனை நோக்கி நீ தவம்புரிந்து பெறவிரும்பிய பாசுபதாஸ்திரத்தை இப்பொழுது பெறுவாய். இப்பொழுது கேட்ட முத்திப்பேற்றை காளத்தியிற் பெறுவாய். என்னை வேடனென்று இகழ்ந்தமையால வேடுவ குலத்தில் பிறந்து காளத்தியில அடைகுதி எனக் கூறினர் என்று சீகாளத்திப் புராணம் கூறுகின்றது. இக்காரணத்தினால் வேடர் குலத்திற் பிறப்பதன்முன்னரே சகல கலையறிவுகளையும், தவப்பேற்றினையும், இறைவனபால அன்பினையும் கண்ணப்பர் உடையராக இருந்தனர் என்பது பெறப்படும், இக்கருத்துக்களையுட்கொண்டே "கலைமலிந்தசீர்நம்பி" முன்புசெய் தவத்தினீட்டம் என்று கூறப்பட்டன என அறிக.

இங்ஙனம் முற்றவமுடையாராய்ப் பிறந்த "புண்ணியப் பொருளாயுள்ள பொருவில் சீர்த் திண்ணனார்" செல்வக் குழந்தையாக வளர்ந்து சில வாண்டுகள் கழிந்தன. விற்பயிற்சி பெறும் பருவம் எய்தியது. "தேனலர் கொன்றையார்க்குக்" "கானவூன் அமுதமாக்கும்" சிலைப்பயிற்சி விழா மிகக் குதூகலத்துடன் நடைபெற்றது வேடர் சேரியில். "கானவர்க்கரிய சிங்க"மாகிய திண்ணனார் விற்பயிற்சி முற்றக்கற்று "எல்லையிலாப்புண்ணியந் தேன் நிமேன்மேல் வளர்வதன் பொலிவுபோல"ப் பதினாறுண்டுகள் நிரம்பினர். தந்தையாகிய நாகனும் மூப்பெய்தினன். திண்ணனார்க்கு மலைநாட்டின் அரசுரிமையை நல்க நினைந்தனன். மகனை அழைத்து, "எனக்கு மேலாய்—மன்னுசிலை மலையர்குலக்காவல் பூண்டு மாறெறிந்து மாவேட்டை ஆடி என்றும்—உன்னுடைய மரபுரிமை தாங்குவாய்" எனக்கூறி அரசுக்கு அடையாளமாகிய உடைதோலும் வாளும் அளித்தனன். காலந்தாழ்க்காது காட்டுக்குச் சென்று வேட்டை புரியுமாறு பணித்தான் நாகன். தன் இருக்கையை அடைந்த திண்ணனார் கன்னி வேட்டைக்குப் புறப்படலானார். உடைகளை அணிந்து ஆயுதந் தாங்கிச் சிலைவீரர்களுடன் காட்டகம் புக்கனர். வேடர்கள் நாலாபக்கமும் அம்புமாரி சிதறினர், வேட்டை நாய்கள் நாற்றிசையும் ஓடியோடி ஆரவாரித்தன "ஏனமோடு மானினங்கள் எண்குதிண்கலைக்குலம்" ஆதிய பல விலங்கினங்கள் வெருண்டு திசைகெட்டு நெறிகெட்டு ஓட்டெடுத்தன. சில அங்கங்கள் துணிபட்டிறந்தன. இவ்வாறு நிகழும்பொழுது ஒருபன்றியானது பேரொலியுடன் சேகவிலாது ஓடிற்று. திண்ணனார் அப்பன்றியைத் தொடர்ந்தனர். நாணனும் காடனும் அவர்பின்னே சென்றனர். பன்றியும் ஒரு மலையடிவாரத்திலுள்ள மரக்கூட்டங்களினிடையில் தங்கி நின்றது. வாளை உருவினார் திண்ணனார் [illegible] துண்டாயிற்று.

களைப்பெய்திய மூவரும் உணவுட்கொள்ள விரைந்தனர். அரைக்காத தூரத்திற்கப்பால் 'பொன்முகலியாறு' சலசல என்று இன்னோசையுடன் ஓடிக்கொண்டிருக்கின்றது, அதன் பக்கலில் அடர்ந்த சோலைக் காடுகளையுடைய உயர்ந்த மலை ஒன்றும் இருக்கின்றது, அம்மலை உச்சியில் 'குடுமித்தேவர்' வீற்றிருக்கின்றனர், என்று கூறினன் நாணன். மூவரும் பன்றியொடு பொன்முகலியை அடைந்தனர். அவ்விடத்து நெருப்பு உண்டாக்கிப் பன்றியைப் பதப்படுத்துமாறு காடனுக்குப் பணித்து மலையை நோக்கி நாணனுந் திண்ணனாரும் நடந்தனர். பொன்முகலியைக் கடந்து தேனினங்களின் இசைபாடுங் காளத்தி மலையின் உச்சியை அணுகினர். காந்தத்தின் முன் இரும்பு போலாகிவிட்டார் திண்ணனார். எள்ளளவும் இரக்கமின்றி விலங்கினங்களை உயிர்மாய்க்கும் வேடர்தலைவனது நெஞ்சமாகிய வலிய குன்றில அன்பெனும் அருவி ஊற்றெடுத்தது. ஆசைப் பெருக்கில் ஆசையாகிய அலைகள் கிளம்பின. அலைகள் கிளம்பின. அலைகள் ஒருவகு திரண்டு நிலைபெற்ற காதலாயிற்று. காதல் மிக்கெழக் குறித்த பொருளைக்காணும் அல்லது பெறும் வேட்கை உண்டாயிற்று. மலை வழிகளை நன்கு அறியாத திண்ணனார் முன்பாகச் செல்கின்றனன் நாணன். அவனிலும் நன்கு பழகிய, "முன்புசெய் தவத்தினீட்டம்" எடுத்துக்காட்டிய "முடிவிலா இன்பமான அன்பும் முன் செல்கின்றது. இவ்விரு துணைகளின் பின்னேயே திண்ணனார் வழிக்கொள்கின்றனர். சிவத்தை அடைவதென்றால தத்துவங்களெனும் படிகளை கடந்தல்லவா செல்லவேண்டும். மறக்குடிப் பிறந்த திண்ணனார்க்குத் தத்துவமெங்கே, சிவமெங்கே, தத்துவங்களாகிய படிகளைக் கடக்குமாறெங்கே, என்று நாம் யோசிக்கலாம். முற்றவமுடையாரல்லவா திண்ணனார். அவர் காளத்திமலையின் படிகளை ஏறிச் செல்கின்றனர். நமக்கு அம்மலையின் படிகள் வெறுங்கற்படிகளாகத் தோன்றலாம். திண்ணனார்க்கு அவை யெல்லாம்" பேணு தத்துவங்களெனும் பெருஞ் சோபானங்களாயின. மலை உச்சியில் சத்தியே வடிவமாக வீற்றிருக்குஞ் சிவத்தைக் காணும் வேட்கை மேற்செல்லும்பொழுது,

"திங்கள்சேர் சடையார்தம்மைச்
சென்றவர்காணு முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த
அருட்டிரு நோக்க மெய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்பு
விட் டகலநீங்கிப்
"பொங்கிய ஒளியினீழல் பொருவில்
அன்புருவமானார்"

திண்ணனார் காளத்திநாதரைக் காணுமுன்னர் இறைவன் அருள் நோக்கம் அவர்மீது பட்டது. இறைவனது அருட்பார்வை, கயிலையில் அருச்சுனனை நோக்கி நீ காளத்தியை அடைந்து "சாருநாள் வலவே முத்தியுமடைவாய்', என்று கூறிய காலத்துப் பார்த்த பார்வையின் தொடர்ச்சியல்லவா? அதனாலேதான் திண்ணனார் காணுமுன இறைவன் நோக்கு ஏற்படலாயிற்று. "தாமென்னைப—ர்த்தான் பழையவினைப் பஞ்சமலக் கொத்ததை யெல்லாம்—தீர்த்தான இனிவு வேறாகின்றான்" என நெஞ்சுவிடுதூதிற் கூறியவாறே வேடராகப் பிறந்த இப்பிறப்பின் இயல்பும், அதனோடே தொடர்ந்து நின்ற பலமாயை கன்மங்களும் திண்ணனாரைவிட்டு நீங்கின. இறைவனைக் கண்டனர் திண்ணனார். அன்பானது மிக்க வேகமுற்று முறைப்படச் [illegible] வேகத்தைத் தாங்கத் [illegible] இன்னின்றாரல்லர்.

விரைவோடும் மோகத்தோடும் ஓடிச் சென்று தழுவி உச்சி மோந்தனர், கண்ணீர் அருவியாகப் பாய்ந்தது. "அடியனேற்கிவர் இங்கே அகப்பட்டார்" என்று நினைந்து இணையற்ற அன்பே ஒரு வடிவமானாற்போலானார், இறைவனது தனிமைக்கு இரங்கினர். இலையும் பூவும் இட்டு நீரும் வார்த்து இக்காரியஞ் செய்தார் யாவரென்று நாணனை வினவினர். இஃது பார்ப்பான ஒருவன செயலென்று முன்னாட்கண்டவாறே கூறினன் நாணன். இறைவற்குக் "கானவூன் அமுதமாக்கும்" திண்ணனார் இறைச்சி கொண்டு வருமாறு அரிதிற் பிரிந்து சென்றனர். "முன்னைப் பிறந்தவை வேட்கை மீக்கூர—அன்புகொண்டுய்ப்பச் செல்லுந்" திண்ணனார்நாணனொடு பொன்முகலியை அடைந்தனர். காடன் அவர்களை நோக்கிக் காலந் தாழ்த்தமைக்குக் காரணம் யாதென வினவினன். குடுமித் தேவரைக் கண்டமையையும், திண்ணனார் ஆங்குநின்ற நிலைமையினையும் நாணன் கூறினன்.

திண்ணனாருடைய அன்பையும், உணர்ச்சி நிலைமையையும் சேக்கிழார் பெருமான் கூறும்பொழுது "வனசினைப் பற்றிப்போதா வலனுமோ என்ன நேசம்" என்றனர். உடும்பானது வளைந்த உள்ளிடமுள்ள முழைபுகா அலலது மரப்பொந்துட் புகுந்தால அதனை வெளிப்படுத்தல் அரிது. அஃது எவ்வாறாயினும் தனபிடி தவறாது. அது போன்றே திண்ணனாரும் இறைவனைக் கண்டவுடன அன்பினால் பிணிப்புண்டு அவனையன்றி வேறொன்றையும் சிந்தியாதவராய், அறைபடவும் வாராது நின்றனரென்க.

—வரும்

## கல்கத்தா கம்பன் கழகத்தில் திருவள்ளுவர் தினவிழா!

கல்கத்தா கம்பன் கழகத்தின் ஆதரவில் ராவ்பகதூர் P. S. மீனாட்சி சுந்தரம் அவர்களின் தலைமையில் சென்ற 6-6-44 மாலை 6½ மணியளவில் திருவள்ளுவர் திருநாட் கொண்டாட்டம் நடைபெற்றது.

அவ்வமயம் ஸ்ரீமான்கள் குப்புசுவாமி சாஸ்திரிகள், ஓ. எஸ். வி. மணி ஸ்ரீமதி. ஆர். வி. சாஸ்திரி அம்மையார் ஆகியவர்கள் திருவள்ளுவருடைய திருக்குறளின் சிறப்பைப்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

தலைவர் முடிவுரையாக 'பிழைப்புக்காக வடநாடு வந்து தமிழை மறந்து இன்பமில்லா வாழ்க்கை நடத்தும் எங்களைத் தட்டி யெழுப்பி, தமிழ்த்தாய்க்குச் சேவை செய்த தவப் புலவர்கள் சேகரித்து வைத்துச் சென்ற அமுதத்தை எங்களுக்கு ஊட்டுவதற்காகக் கம்பன் கழகத்தை இங்கு ஸ்தாபித்து, ஸ்ரீமதி. ஆர். வி. சாஸ்திரி அம்மையாரும் திரு. பொ. சுப்பையா பிள்ளை அவர்களும், ஏனைய அன்பர்களும் தன்னல மற்றுத் தமிழ்த் தாய்க்குத் தொண்டு புரிவதை நாம் பாராட்டி நாமும் அத்தொண்டில் ஈடுபட்டு உழைக்கவேண்டும்".

நாம் ஒவ்வொருவரும் திருக்குறளைப் படித்து நம் வாழ்க்கையில் பயன் படுத்திக் கொள்வதற்கு ஸ்ரீ சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள் எளியநடையில் எழுதியிருக்கும் 'திருக்குறளின்பம்' போன்ற நூல்கள் வெளிவரவேண்டுமென்றார்.

காரியதரிசி பொ. சுப்பையா வந்தனோபசாரம் கூறக்கூட்டம் இனிது முடிந்தது.

—கடித

வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காந்திஜீ - ஜயக்கர் சந்திப்பு

### ராஜீய நெருக்கடியைத் தீர்க்க ஆலோசனைகள்

பம்பாய் யூன் 15—

இன்று மாலை காந்திஜி பூனாவிற்குப் புறப்படவிருக்கிறார். திரு. ஜி. டி. பிர்லா, புலாபாய் தேசாய், என். ஆர். சர்க்கார் ஆகியவர்கள் நேற்று மாலை காந்திஜியைப் பேட்டி கண்டனர். இவர்கள் காந்திஜியுடன் இப்போதைய ராஜீய நிலைமையை விவாதித்தனர் என்று தெரிகிறது.

நேற்று மாலை காந்திஜியைச் சந்தித்துப் பேசிய திரு. ஜயக்கர் ராஜீய நெருக்கடியைத் தீர்க்க எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்பற்றி ஆலோசனைகள் கூறினாரென்று தெரிகிறது.

காலையில் மோசமாக இருக்கும் பிரார்த்தனை நேரத்தில் காந்திஜியைத் தரிசனஞ் செய்வதற்காகக் கடற்கரையில் ஏராளமான ஜனங்கள் நேற்றுக் கூடியிருந்தனர். காந்திஜியின் நண்பர்களும் உறவினர்களும் அமெரிக்க நீக்ரோ குருபபுக கோஷ்டி யொன்றுங் காந்திஜியைத் தரிசித்தனர். பம்பாய் அசெம்பிளிச் சபைத் தலைவர் திரு. வி. ஜி. மாவலங்காருக்குக் காந்திஜி பேட்டியளித்தார்.

பிரார்த்தனைக்குப் பின்னர்க் காந்திஜிக்கு ஸிந்தியா ஸ்டீம் நவிகேஷன் கம்பெனி உத்தியோகஸ்தர்கள் சார்பில் 3 பண முடிப்புக்கள் வழங்கப்பட்டன. கஸ்தூரிபாய் நிதிக்காக 5001 ரூபாயும், காலஞ்சென்ற மகாதேவ தேசாய் ஞாபகார்த்த நிதிக்காக 1001 ரூபாயும் ஹரிஜன நிதிக்காக 1001 ரூபாயும் குறித்த பண முடிப்புகளில் அடங்கியிருக்கின்றன.

## ரோந்து கொன்ஸ்டபிள் சுட்டுக் கொல்லப்பட்டார்

கொழும்பிலுள்ள ஓர் இராணுவப் பகுதியில் நள்ளிரவுக்குச் சிறிது பின் ஒரு கடற்படைப் பொலீஸ் 'கொன்ஸ்டபிள்' கடற்படைக் காவலர் ஒருவரால் சுடப்பட்டார்.

இச்சம்பவம் அகஸ்மாத்தாக நடந்ததாயினும், கடற்படைக் காவற்காரர் இப்படியான விபத்தைத் தவிர்க்க தமது துப்பாக்கியை உபயோகிப்பதில் அதிக கவனமாக இருக்க வேண்டுமென்று நகர மரண விசாரணை அதிகாரி தெரிவித்தார்.

மரணவிசாரணை பொறளைப் பொலீஸ் நிலையத்தில் சென்ற புதன்கிழமை நடைபெற்றது.

தெமட்டகொடை பிளேஸ்லேனில் வசிக்கும் 55 வயதுள்ள அம்ஜடீன் சதிமரன என்பவரே காலஞ்சென்ற கடற்படைப் பொலிஸ்கொன்ஸ்டபிளாவர்.

## இந்தியாவில் இலங்கை அரசாங்கப் பிரதிநிதி

### அவசியமா என்பதை அரசாங்கசபை தீர்மானிக்கவேண்டும்

இந்தியாவில் இலங்கை அரசாங்கப் பிரதிநிதியினுடைய பதவிக்கு ஒருவரை நியமனஞ் செய்யவேண்டியது அவசியந்தானென்று அரசாங்கசபை தீர்மானிக்குமுன் அப்பதவிக்கு எவரையும் நியமனஞ் செய்யக்கூடாதென்று கோரி மனுஷ்ணாப்பிரதிநிதி திரு. ஜே. தியாகராஜா ஒரு பிரேரணையை அரசாங்கசபையில் முன்னறிக்கை செய்தார். தாம் இதை ஒரு அவசரப் பிரேரணையாகக் கொண்டுவரப் போவதாகத் தெரிவித்தார்.

## கொலை செய்ததாக வியாபாரிமீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் யூன் 15—

பெருமாள் கோவிலடியில் வசிக்கும் 54 வயதுள்ள இளையகுட்டியின் மனைவி சின்னம்மா என்பவரைக் கொலை செய்ததாகக் கே. தர்மலிங்கம் என்ற வியாபாரிமீதும், ஆர். சண்முகத்தின் மீதும் தொடரப்பட்ட வழக்கு விசாரணையை யாழ்ப்பாணம் நீதிபதி திரு. ஜே. ஈ. ஏ. அலிஸ் வடபகுதி அசைஸ் கோட்டுக்கு மாற்றினர்.

காலஞ் சென்றவரை எதிரிகள் மிதித்துக் கொலை செய்ததாகச் சொல்லப்படுகிறது.

திரு. டி. ஸி. ராஜரத்தினம் திரு. கே. வி. பாலசிங்கம் ஆகியோர் வழக்காளியின் தரப்பிலும் திரு. ஜி ஜி. பொன்னம்பலம் திரு. ஸோமசபாபதி திரு. கே. வி. சின்னத்துரை திரு. எம். இராசையா ஆகியோர் முதலாம் எதிரி தரப்பிலும் திருவாளர்கள். எஸ். எஸ். தம்பித்துரை ஆர். ஆர். நல்லையா ஸி. டி. சிங்கரத்தினம் ஆகியோர் இரண்டாம் எதிரி தரப்பிலும் ஆஜராயினர்.

## 'டயர்' விற்றவர்

### 1500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டார்

மோட்டார்க்காரின் உபயோகித்த பாகங்களை வைத்து வியாபாரஞ் செய்யும் வியாபாரி 'பெர்மிட்' இல்லாத ஒருவருக்கு 2 உபயோகித்த 'டயர்களை' விற்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டார். விசாரணை இறுதியில் கொழும்பு நீதிபதி எதிரிக்கு ரூபாய் 1500 அபராதம் விதித்தார்.

கொழும்பு ஜின்னேஸ் ஸ்ட்ரீட்டிலிருக்கும் இரத்தின பாண்டியன் இரண்டு உபயோகித்த மோட்டார் காரடயர்களை 'டாம் ஸ்ட்ரீட்' வாசியான கே. டி. ஏ. கருணாதாச என்பவருக்கு விற்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டார். எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

எதிரியின் சார்பாகச் சமுகமாயிருந்த திரு. ஈ. வீரக்கோன் தண்டனையைக் குறைக்கும்படி வேண்டினார்.

இரண்டு 'டயர்'களுள் ஒன்று திருட்டு 'டய'ரென்றும் இரண்டையும் ரூபா 550 க்கு எதிரி விற்றதாகவும் ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் திரு. என். டப்ளியூ. வீரசிங்க விசாரணையின்போது கூறினார்.

## உபசாரணைக் கூட்டம்

பிரம்மஸ்ரீ. J. T. சதாசிவஐயரவர்களுக்கு மூகாந்திரம்பட்டம் அரசினரால் அளிக்கப்பெற்றதை முன்னிட்டு அவர்களுக்கு ஓர் உபசாரணை செய்வதை ஆலோசிப்பதற்கு 17-6-44 சனிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் வண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டத்தின் தற்காலிக தலைவராகத் திரு. க. நவரத்தினம் அவர்களும், காரியதரிசியாக திரு. நா. தம்பிரத்தினம் அவர்களும் சபையோரால் தெரிவு செய்யப்பெற்றனர்.

பிரம்மஸ்ரீ. J. T. சதாசிவஐயரவர்களுக்கு மூகாந்திரப்பட்டம் கிடைத்ததற்காக நாம் ஓர் பகிரங்க உபசாரணை செய்யவேண்டும் என்னும் பிரேரணை சபையோரால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. முதலியார் திரு. S. கந்தையா அவர்களைத் தலைவராகவும், திரு. க. நவரத்தினம், பிரமஸ்ரீ. சி. சோமசுந்தர ஐயர் ஆகியோரை உபதலைவராகவும், பிரமஸ்ரீ. A. முத்துக்குமாரசுவாமிஐயர் திரு. நா. தம்பிரத்தினம் ஆகியோரை இணைக்காரியதரிசிகளாகவும் இன்னுஞ் சிலரை அங்கத்தவர்களாகவும் கொண்ட ஓர் [illegible] தெரிவுசெய்யப்பட்டது.

## மகோற்சவங்கள்

இற்றைத் தினத்தில் (19-6-44) சாவகச்சேரி வாரிவனநாத சுவாமி கோயில், ஆவரங்கால் இராமலிங்கேசுவரசுவாமி கோயில், இணுவில் கந்தசுவாமிகோயில், சுழிபுரம் பறுளாய் ஈசுவரவிநாயகர்கோவில், ஊர்காவற்றுறை கணபதீச்சுரம் விசுவநாதகோயில், சிதம்பரம் என்னுந் தலங்களில் துவஜாரோகணமாகி மகோற்சவம் நடைபெறும். மேற்படி கோயில்களில் இந்த ஆனி மீ 14-ந் திகதி செவ்வாய்க்கிழமை இரதோற்சவமும் அடுத்தநாளாகிய உத்தரபுண்ணிய தினத்தன்று தீர்த்தோற்சவமும் நடைபெறும். வண்-வீரமாகாளியம்மை கோவிலில் இன்று துவஜாரோகணமாகி, 22௨ இரதோற்சவமும் அடுத்தநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## பீட்டர் - டைட்டோ சமரசம்

### சர்ச்சில் எடுத்துக் கொண்ட பங்கு

லண்டன் யூன் 16

யூகோஸ்லேவிய அரசர், பீட்டருக்கும் மார்ஷல் டைட்டோவுக்கும் சமரஸம் ஏற்பட்டு இவ்விருவர்களும் கோடிப்பாக உறவுகள் வைத்துக் கொள்ள ஆரம்பித்து விட்டனர். இதற்கு பிரதம மந்திரி சர்ச்சல் மிகவும் பிரதானமான பங்கெடுத்து இச்சமரஸம் ஏற்பட உதவினார் என்று வெளியாகிறது. இச்சமரசம் போல்கன் அரசியல் நிலைமையை மாற்றிவிடும். ஆங்கிலோருச்சிய தீர்க்கப்பட்டது, ரஷ்யாவுக்கும் மேற்கத்திய ஜனநாயக நாடுகளுக்கும், ஐரோப்பிய அரசியல் நிலைமை விஷயமாக யோசிப்பு இருந்து வருகிறது என்பதை திருபிக்கிறது.

## பின்னிஷ் ஸ்தானிகருக்கு அனுமதிச்சீட்டு

### வெளியேறும்படி அமெரிக்க அரசாங்க உத்தரவு

வாஷிங்டன், யூன், 16—

அமெரிக்காவில் பின்லந்து ஸ்தானிகராயிருக்கும் மிஸ்டர். புரோகோவும் மூன்று ஆலோசகர்களுக்கும், அமெரிக்காவை விட்டு வெளியேற அமெரிக்க அரசாங்கம் அனுமதிச் சீட்டு அளித்துவிட்டனர். அவர்களுடைய நடவடிக்கைகள் அமெரிக்க நன்மையைப் பாதிப்பதாயும், இவ்விதம் அவர்கள் வெளியேற்றப்படுவது அமெரிக்க - பின்லந்து தேசங்களுக்கிடையே யிருக்கும் அரசியல் உறவைப் பாதிக்காது என்றும் அமெரிக்க அரசாங்க அறிக்கை கூறுகிறது.

## பியாக்கில் ஜப்பானிய ஸ்தலங்கள் சூழப்பட்டன

### ரபால் தாக்கப்பட்டது

நியூகினி யூன் 17

நியூகினியில் நேசதேச முன்னணித் தலைமைக் காரியாலயத்திலிருந்து வெளியாகும் மாக் ஆர்தர் அறிக்கை கூறுவதாவது:- டச்சு நியூகினியிலிருக்கும் பியாகில் நேசதேசத் தரைப்படைகள், கரையோரமாயுள்ள மேட்டுப் பிரதேசங்களுக்கு மேற்கே ஜப்பானிய ஸ்தலங்களை சூழ்ந்துகொண்டிருக்கின்றன. ஜப்பானியர் ஸ்தலங்களில் தொடுத்த டாங்கி எதிர்ப்புகள் மடக்கப்பட்டு விட்டன. 160 ஜப்பானியர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

பஸிபிக்கிலிருக்கும் சந்து நத தீவுகள் பல நேசதேசங்களால் தாக்கப்பட்டன. நியூபிரிட்டனிலிருக்கும் ரபாலமீது மற்றொரு நேசதேச விமானத்தாக்குதல் நடைபெற்றது.

## ஜனாதிபதி ரூஸ்வெல்ட்

### இங்கிலாந்துக்கு விஜயம்பற்றி வதந்திகள்

வாஷிங்டன் யூன் 16

ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சமீபத்தில் இங்கிலாந்துக்கு விஜயம் செய்வார் என்று அமெரிக்க அதிகார வட்டாரங்களில் வதந்திகள் உலவுகின்றன. 'ஐரோப்பா விடுதலை' எவ்விதம் நடைபெறுகிறதென்பதை அவர் தானாகவே நேரில் பார்க்க விரும்பலாம் என்று கூறப்படுகிறது.

## பாங்காக்மீது நேச விமானத் தாக்குதல்

சுங்கிங் யூன் 16

இம்மாதம் 5ம் தேதி பாங்காக் மீது நேச விமானங்கள் நடத்திய பகல் விமானத் தாக்குதல் அமெரிக்க பெரிய பறக்கும் கோட்டை விமானங்களால் நடத்தப்பட்டது. நேற்றிரவு ஜப்பானுக்குப் போன 'யாத்திரைக்கு' முன் கூட்டிப் பரீட்சார்த்தமாகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாம்.

## தேகவியோகம்

இம்மாதம் 13-ந் திகதி செவ்வாய்க்கிழமையன்று, ஹெட்ஓவசிபாரக் கடமை பார்த்து இளைப்பாறியிருந்தவராகிய திரு. ஆறுமுகம் சுப்பிரமணியரவர்கள் வண்-கோவியடியிலுள்ள தமது இல்லத்தில் தேகவியோகமாயினர் என்னுந் துக்கச் செய்தியை இங்கு தெரிவிக்க வேண்டியவர்களாகின்றோம். இவரைப் பிரிந்து வருந்துமனைவியாருக்கும் புதல்வருக்கும் இருபுதல்விகட்கும் ஏனைய சுற்றமித்திரர்க்கும் எமது மனப்பூர்த்தி அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இவர் தேகவியோகத்தின்பொருட்டு இந்துசாதனத்திற்குத் தானமாகவரித்தனுப்பிய ரூ. 5 வரப்பெற்றும்.

## குறுந்தொகை

2ம் பக்கத் தொடர்ச்சி

முன்னிலையாக்கல்; 'நண்டது மொழிமோ' என்றது சொல்வழிப்படுத்தல்; 'கூந்தலின் நறியவு முளவோ'என்றது நன்னயமுரைத்தல்; 'காமஞ் செப்பாது' என்றது என்னிடத்து வண்டாதலின் எனக்காகக் கூறுது மெய்கூறெனத் தன் இடம் அதுவாகக் கூறலின் இடமணித்தென்றது; 'பயிலியது கட்பு' என்றது தன்னிலையுரைத்தல்'' என்றிவ்வாறு உரைபோல் விளக்கி அதனையும் நயமும் வாய்ப்ப எழுதச்செலவதைக்காணலாம். இவ்வாறே இவராலும் பிறராலும் எடுத்தாளப்பட்டு விளக்கிச் செல்லப்படும் பாக்கள் இன்னும் பல. உரையாசிரியர்கள் மாத்திரமல்ல, நுண்மாண் நுழைபுலம் வாய்ந்த நூலாசிரியர்களுள் பலர் குறுந்தொகைச் செய்யுட்களை எடுத்தாண்டிருக்கின்றனர். நூலாசிரியர்களும் உரையாசிரியர்களுமாக ஏறக்குறைய இருபத்தொன்பதின்மர் இந்நூலினின்றுமேயுள்ள 235 செய்யுட்களை எடுத்தாண்டுள்ளனர் எனக் கணக்கிடப்படுகின்றது. இந்நூலைக் குறளோடு ஒருபுடை ஒப்புக்கூறலாம். எழுகடலையும் பரந்து விரிந்த பொருள்களை லரவற்றையும் புகட்டிச் சிறப்பாக அறத்தைத் உணர்த்துக் குறுகத் தறித்தது குறள். இதுவும் அளவிற் குறுகியது; ஆயினும், இனப் பொருள்களெல்லாம் 'செவ்வனுய்யற செறித்து இனிது காட்டி' விளக்குவதாகும்.

ஆகவே, இத்தகைய பெருமை வாய்ந்த இனிய குறுந்தொகை நூலினகண்ணே ஆங்காங்கு விளங்கும் நறுந்தமிழ்ச் செய்யுட்கள் சிலவற்றை எடுத்துக்காட்டுதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ௬வேதாசுவதரோபநிடதம்

(திரு. ஐ. பொன்னையா, ஏழாலை)

## இரண்டா மத்தியாயம்

(முற்றொடர்)

(௬) ப்ராணாந் ப்ரபீட்யேஹ ஸம்யுக்தசேஷ்ட: க்ஷீணேப்ராணே நாஸிகயோச்ச்வஸீத, துஷ்டாச்வ யுக்தமிவ வாஹமேநம் வித்வாந் மனோ தாரயேத ப்ரமத்த:

இ—ள். ஸம்யுக்த சேஷ்ட:-அங்க சேட்டைகளை அடக்கியவனுகிய, வித்வாந்-அறிஞன், இஹ-இப்பொழுது ப்ராணாந்ப்ர பீட்ய-பிராணனை ஒடுக்கி, க்ஷீணேப்ராணே-பிராணன் குறைவடைகையில், நாஸிகயா உச்வஸீத-நாசி வினுயில உச்சுவாசித்தல் வேண்டும். அப்ரமத்த: வித்வாந்-புயக்கமொழிந்த அறிஞன், துஷ்டாச்வயுக்தம்-துட்டக் குதிரையோடு கூடிய, வாஹமிவ—வண்டியோல, ஏநம்மந:-இந்த மனத்தை, தாரயேத-அடக்கி வைத்திருப்பானுக.

கு-பு (௬) "அங்க சேட்டைகளையடக்கியவனுகிய அறிஞன்" அங்க சேட்டைகளை அடக்குதல் - இயம நியமங்களின்பாற்படும். இயமநியமங்களுடைய உத்தமர்க்கே தியான யோகம் கைகூடும். இயமமாவது; கொல்லாமை, களவு செய்யாமை, பொய்யாமை (உண்மை கூறுதல்) பிறர் பொருள் விரும்பாமை, இந்திரியங்களை விடயங்களிற் செல்லாவொட்டா தடக்குதல் முதலாயின. நியமமாவது;-தவமுடைமை, சுத்தமுடைமை, பெறற்து கொண்டு மகிழுதல், ஞானநூலாராய்ச்சி, கடவுளை வழிபடுதல் முதலாயின.

இயமம்; "கொல்லான் பொய் கூறுன களவிலா னெண்குணன், நலலானடக்க முடையானடுச் செய்ய, வல்லான பகுந்துணபான் மாசிலான்கட்காமம், இல்லா னியமத் திடையினின்றுனே" (திருமந்திரம்)

நியமம் - "தபஞ் செபஞ் சந்தோடமாத்திக தானம், சிவனற்ன விரதமே சித்தாந்தக் கேள்வி, மகஞ்சிவ பூசை யொண்மதி சொல்லீரைந்தும், நிகம்பல செய்யல் நியமத்தனுமே" (திருமந்திரம்) சந்தோடம்-கிடைத்ததுகொண்டு மகிழுதல். ஆத்திகம்-கடவுள் நம்பிக்கை. தானம் இரப்பவர்க்கில்லையெனுது கொடுத்தல், சிவன்றன விரதம்-சிவாகமவிதிவழிவமாகிய திருவெண்ணீற்றினை உத்தூளனமாயாவது திரிபுண்டரமாயாவது உடம்பிற்றரித்தலாகிய பாசுபதவிரதம் - இது சிவபெருமானுகிய பசுபதியைக் குறிக்கொள்கவுடைமையின் 'பாசுபத விரதம்' எனப்பட்டது. சித்தாந்தக் கேள்வி-ஞான நூலகளைக் குருமுன்னிலையிற் கேட்டல். குருமுனனிலையிலகேளாது தாமே புத்தகங்களைத் தேடிப்படிப்போர், அவற்றின மெய்ப்பொருள் காணமாட்டாராய் விபரீதப் பொருள்கொண்டு இடர்ப்படுவராகலின் 'சித்தாந்தக்கேளவி' என்றூர்.

கு-பு: (உ) "பிராணனை யொடுக்கி ......உச்சுவாசித்தல வேண்டும்." இதனுல பிராணயாமம் கூறப்பட்டது. பிராணவாயு வெளியே வருவதும் உளளே செல்லுவதுமாக இருக்கும். வெளியே வருவது நிச்சுவாசம அல்லது இரேசகம் எனவும உளளே செல்லுவது உச்சுவாசம் அல்லது பூரகம எனவும் கூறப்படும். வெளியே வருதலையும உள்ளே செல்லுதலையும ஒழித்து உளளேயுள்ள வாயுவை அசைவறத் தடுத்துநிறுத்துதல கும்பகம் எனப்படும். இம்முறையால பிராண வாயுவை வசங்க வடுத்து நிறுத்துதல பிராணயாமமாம். "சுகமார்க்கம புலன்றுக்கத தடுத்துவளியிரண்டும்" என்றது ஒலைஞானசித்தி. வளி யிரண்டும் என்றது உச்சுவாச நிச்சுவாசங்களை. சகமார்க்கம்-யோக நெறி. இப்பயிற்சியினுல் மனம்சலிப்பற்று நிற்கும்.

"மேல் கீழ் நடுப்பக்க மிக்குறப் பூரித்துப், பாலாமிரேசகத்தாலுட் பதிவித்து, மாலாகி யுந்தியுட் கும்பித்து வாங்கவே, ஆலாலமுண்டானருள் பெறலாமே" (திருமந்திரம்)

பொ-ரை. இயம நியமங்களுடைய அறிஞன் பிராணயாமப் பயிற்சியினுல் துட்டக்குதிரையோடு கூடிய வண்டிபோல் அலையுநிந்தமனத்தை அலையவிடாது ஒரு நிலையில நிறுத்தக் கடவன்.

மேல எட்டாம் மந்திரத்திற் கூறிய பிரணவத் தியானம் நன்கு சித்தி பெறும் பொருட்டு அதற்குரிய பரம்பரைச் சாதனங் கூறிய வாறு.

கடோபநிடதம் பின்வருமாறு கூறுகின்றது. "எவனொருவன் அடக்கப்படாத மனதினுலே புத்தியற்றவனுக ஆகிருனே அவனுக்கு சாரதிக்கு (அடங்காத) துட்டக்குதிரைகள் போல, இந்திரியங்கள் வசப்படாது போகின்றன. (கடம். ௧-௩-௫)

(௧0) ஸமே ஶுசௌ ஶர்க்கரா வஹ்நி வாலுகா விவர்ஜிதே ஶப்த ஜலாஶ்ரயாதிபி: மநோநுகூலே நது சக்ஷுபீடநே குஹாநிவதாஶ்ரயனே ப்ரயோஜயேத,

இ—ள்: ஸமே - சமமானதும், ஶுசௌ - சுத்தமானதும், ஶர்க்கரா - கோராங்கல்லு, வஹ்நி - அக்கினி, வாலுகா-மணல்ஶப்தஜல ஆஶ்ரய ஆதிபி:-சத்தம் தண்ணீரின் சார்பு முதலியவற்றிலிருந்து, விவர்ஜிதே-விடுபட்டதும், மந: அநுகூலே-மனச்சாந்திக்கு அநுகூலமானதும், சக்ஷுபீடநே-கண்ணுக்குத் துன்பமில்லாததுமாகிய குஹாநிவாத ஆஶ்ரயனே - காற்றிலலாத மறைவிடத்தில் ப்ரயோஜயேத-ஒருவன் தியான யோகஞ் செய்யக்கடவன்.

பொ-ரை:- சமமானதும், சுத்தமானதும், கல்லு, அக்கினி, மணல், சத்தம, ஈரம முதலியவையிலலாததும், மனம சாந்தியடைதற்கு அநுகூலமாயுள்ளதும, கண்ணுக்குத் துன்பமில்லாததுமாகிய காற்றில்லாத மறைவிடத்திலிருந்து ஒருவன் யோகம் பயிலவேணடும்,

---

## இலங்கையில் க்ஷயரோகச் சிகிச்சை நிபுணர்

கீழைத்தேசத்திலே கியாதிபெற்ற க்ஷயரோகச் சிகிச்சை நிபுணர்களுள் ஒருவரான பேராசிரியர் ஸிறீ மொட். மொல்லர் கொழும்பு வந்து சேர்ந்திருக்கிறூர். அவர் இலங்கையில் ஒருமாதம் தங்குவார். இந்த ஒருமாத காலத்துக்குள் இலங்கையிலிருக்கும் எல்லா க்ஷயரோகத் தடைத்தாபனங்களையும்பார்வையிடுவார்.

---


## விளம்பரம்

யாழ்ப்பாணம் சைவாசிரிய கலாசாலை, திருநெல்வேலி

பிரவேச பரீக்ஷைக்கு மனுப்பத்திரங்களை அனுப்புதற்கு மாணவர்களைத் தெரிவு செய்தற்காக நடத்தப்படும் நேர்முகப் பரீக்ஷை 1944ம் ஆண்டு யூன்மீ 28ந் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் "புறௌண்ட் ஸ்ட்ரீட்"டிலுள்ள சைவ வித்தியாவிருத்திச்சங்கக் காரியாலயத்தில் நடத்தப்படும்.

எஸ். அட்சலிங்கம்,
ஜெனறல் மனேஜர்.

சைவ வித்தியாவிருத்திச் சங்கம்,
யாழ்ப்பாணம், 17-6-44.

Mis 54 19 & 22-6-44.


## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

### செவ்வாய் யூன் 20

காலை 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில்செய்திகள் 8 பக்தசேதா† 8-15 ஆங்கிலத்தில்செய்திகள் 8-30 பி வைத்தியநாதன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 திருக்கண்ணபுரம் எஸ் ஸ்ரீனிவாசபிள்ளை புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக் கல்வி 2-30 முடிவு.

மாலை: 5 எம் எஸ் விஜயாள் பாட்டு 5.45 இசைப்பயிற்சி 6 திருக்கண்ணபுரம் எஸ் ஸ்ரீனிவாசபிள்ளை புல்லாங்குழல் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 நாமும் யுத்தமும் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 வாய்த்த குபவலூர் இசைநாடகம் 8 எம் எஸ் விஜயாள் பாட்டு 8-45 பி வைத்தியநாதன் பாட்டு 9-20 ஆங்கிலத்தில்செய்திகள 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 பதம் 10 இசைவேளை† 10-30 முடிவு.

### புதன் யூன் 21

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 தந்திஇசை† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி டி சாஸ்வதி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எம் எஸ் ஷண்முகசுந்தரம் பாட்டு 2 தமிழில செய்திகள 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 திருவீழிமிழலை என் சுப்பிரமணியபிள்ளை வயலின 5-45 இசைப்பயிற்சி 6 டி டி ஸாஸ்வதி பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 கறகாய் பெருக்கம் 7-30 அறிவிப்புகள 7-30தமிழில்செய்திகள் 7-45 தாளவாத்யக்கச்சேரி 8 டாக்கி இசை† 8-30 திருவீழிமிழலை என் சுப்பிரமணிய பிள்ளை வயலின் 9-20 ஆங்கிலத்தில செய்திகள 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 அமெரிக்கவாக்கு 10 ஐரோப்பிய சங்கீதம்† 10-30 முடிவு.

### வியாழன் யூன் 22

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழ் செய்திகள் 8 திரைஇசை† 8-15 ஆங்கிலத்தில செய்திகள 8-30 திருப்பத்தூர் எஸ செல்லம்மாள பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்திலசெய்திகள 1-40 எல் சுசீலாதேவி வீணை 2 தமிழில செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 திருப்பத்தூர் செல்லம்மாள் பாட்டு 5 45 இசைப்பயிற்சி 6 எல் சுசீலாதேவி வீணை 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 17-5 நேசநாடு ரஷ்யா பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில செய்திகள் 7-45 கல்லிடைக்குறிச்சி எஸ ஹரிஹரன் பாட்டு 9 அவன் இரவு நாடகம் 9-20 ஆங்கிலத்தில செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 பொது மக்களும பத்திரிகைகளும் யுத்த நிருபர் 10 ஆங்கிலநாடகம பி பி ஸி ஒலிப்பதிவு 10-30 முடிவு.

---

## மத்திய மாகாணத்திலுள்ள சென்னைக் காவற் கைதிகள்

சென்னை யூன் 10—

மத்தியமாகாணத்தில அம்ரோட்சி சிறையில் வைக்கப்பட்டிருக்கும் காவற் கைதிகளைச் சென்னை மாகாணத்திலுள்ள ஒரு சிறைச்சாலைக்குக் கொண்டுவர ஏற்பாடு நடப்பதாகத் தெரிகிறது. ஆனால், அதிகார வட்டாரங்களில் ஆச்செய்தி ஊர்ஜிதமாகவில்லை.

## திருஞானசம்பந்தர் விழா

மட்டக்களப்புத் திருத்தொண்டர் கழகத்தின் சார்பில் கல்லடி உப்போடை விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் 7-6-44 புதன்கிழமை பிற்பகல் சுவாமி நிதஜானந்தர் அவர்கள் தலைமையில் ஓர் கூட்டம் நடந்தேறியது. அவ்வமையம் ஸ்ரீமாந். V. குப்புச்சாமி B.A. அவர்கள் சபையோர் மகிழுமாறு நயம்பட ஞானசம்பந்தர் வாழ்க்கையை எடுத்துக் கூறியுள்ளார்கள். அப்பால் பேச்சுப் போட்டியில் பரிசுபெற்ற மாணவன் ஸ்ரீ S. கணபதிப்பிள்ளை சொற்பொழிவாற்றினுர்.

அடுத்தபடியாக ஸ்ரீ. G. பாலசுப்பிரமணியம் தமது இன்னிசை விருந்தை நல்கினுர். சபையில் எள் விழுந்தாலுங் கேட்கும் வகையில் அமைதி நிலவியது. கடைசியாகப் பேச்சுப்போட்டி தேவாரப் போட்டிகளில் பரிசுபெற்ற மாணவருக்குத் திரு. K. O. வேலுப்பிள்ளை அவர்களால் பரிசு வழங்கப்பட்டது-காரியதரிசி நன்றி கூறியதும் தேவார பாராயணத்துடன் கூட்டம் கலைந்தது.

—நிருபர்

---

## சம்பந்தர்

3.ம் பக்கத் தொடர்ச்சி

ளால் ஆன்றோர் அழைப்பர்.

தமிழ்நாட்டில் சைவம் புறச்சமய இருளால் சூழப்பட்டுச் சற்றுத் தன்னொளி குன்றியிருந்த காலத்தில் இவர் தோன்றித் திருநீற்றின் ஒளியைப் பரப்பியமையாலும் ஏனைய புறச்சமய இருளைப் போக்கியமையாலும இவருடைய சிவத்தொண்டு ஏனையோரிலும் பார்க்க மிகுதியாகப் போற்றப்படுகின்றது. இதனுற் போலும் நம்பியாண்டார் நம்பிகள் சுவாமிகள்மீது ஆறு பிரபந்தங்கள பாடியது. நம்பிகள இத்தனை பிரபந்தங்கள் செய்தமையால பின்வந்த சேக்கிழார் நாயனுரும் தாம் பாடிய பெரிய புராணத்தில மூன்றிலொருபகுதி இவரதுபுகழை எடுத்துக் காட்டியது.

வேதநெறி தழைத் தோங்க
மிகுசைவத் துறைவிளங்க
பூதபரம்பரை பொலியப் புனித
வாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான
சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்
தொண்டு பரவுவாம்.

---

## அறிவித்தல்

யாழ்ப்பாண டிஸ்திறிக் பகுதியில் உப உணவுப்பொருட்கள் கொடுத்தல்

1944ம்ஆ யூன்மீ 19ந் திகதி திங்கட்கிழமை முதல் 26ந் திகதி வரைக்கும் ஐக்கிய சங்கக் கடைகளல்லாத மற்றைய சில்லறை வியாபாரிகள் மூலம் அச்சில்லறை வியாபாரிகளிடம் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கூப்பன்காரருக்கும் பின்வரும் உப உணவுப் பொருள்களை விற்கும்படி அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

1 மைசூர்ப்பருப்பு ஒரு அவுன்ஸ்
2 உழுந்து ஒரு அவுன்ஸ்

(2) தங்களுக்குச் சேரவேண்டிய உப உணவுப்பொருட்களைக் கட்டுப்பாட்டு உணவுப்பொருட்களுடன் பெற்றுக் கொள்ளலாமென இத்தாலறிவிக்கப்படுகின்றது.

E. B. திசவீரசிங்கம்,
வடமாகாண ஏஜண்டருக்காக.

யாழ்ப்பாணக் கச்சேரி
13—6—44.

G 36 19—6—44

---

வானமுகில வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

---

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday, 19, June, 1944

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org